


Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 05 இதழ்: 287 08.12.2025 பக்கங்கள்:09 editorml21@gmail.com விலை:75/-



# எம்.பிக்களுக்கான ஓய்வூதியம் ரத்து?

02

## ரவி கருணாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

## ஊடகர் லசந்த படுகொலை நீதி பெற்றுக்கொடுக்க வேண்டும்




ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை சம்பவத்திற்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அத்துடன் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க விவகாரம் குறித்து ஒரு நாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தத் தயார் என்றும் நேற்று (07) பாராளுமன்றத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

02

## அர்ச்சுனா எம்.பிக்கு எச்சரிக்கை





தனது அறிவித்தலையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை படைக்கல சேவிதர்களை கொண்டு சபையிலிருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஷ்வி சாலி கடுமையாக எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமரிடத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது சபாபீடத்தை அவமதிக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் வசனமொன்றை வெளியிட்டதாக ஏற்பட்ட சர்ச்சையின்போது அர்ச்சுனா எம்.பி. அமைதியற்ற முறையில்

02

## ஜனாஸா எரிப்பு விவகாரம் - பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குக

### முஜிபுர் ரகுமான் எம்.பி.வலியுறுத்தல்



கொவிட் தொற்றில் மரணித்தவர்களை தகனம் செய்ய எடுத்த தீர்மானம் எமது நாட்டு மக்களின் இன மத குழுமத்தின் மத கலாசார நம்பிக்கையை உரிமையை மதிக்காமல் எடுத்த தீர்மானமாகும்.

அதனால் அந்த அரசாங்கம் எடுத்த இந்த தீர்மானம் தெரிந்துகொண்டு எடுக்கப்பட்டதா அல்லது தெரியாமல் எடுக்கப்பட்டதா என்பதை நாங்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

02

## அமெரிக்கா வெளியேறுவது இலங்கைக்கு சாதகம் !





ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) இருந்து விலக அமெரிக்கா எடுத்த தீர்மானம் இலங்கைக்கு சாதகமாக அமையும் என சட்ட நிபுணர் கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

02

## எம்.பிக்களுக்கான......

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை ரத்துச் செய்வதற்கான முன்மொழிவு ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் நேற்று (07) சமர்ப்பிக்கப்பட்டது.

தனிப்பட்ட உறுப்பினர் ஒருவரின் முன்மொழிவாக இது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி ஒரு கருத்தைக் கொண்டிருந்தது என்றும், அதை சமூகத்திற்கு இழைக்கும் துரோகமாக மாற்றிவிட்டது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்து தெரிவித்தார்.

இதன் காரணமாக, எம்.பி.க்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சேதமடைந்துள்ளதாகவும், அதை மீட்டெடுக்கவே இந்த முன்மொழிவை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நேரத்தில், மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் பணியாற்றி வருவதால், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அவசியமாகியுள்ளதாக ரவி கருணாநாயக்க மேலும் கூறினார்.

“அந்த சமூக எதிர்ப்பை ஒழிக்கவே நான் இந்த முன்மொழிவை முன்வைக்கிறேன். இதை நாம் மாற்றவில்லை என்றால், இது ஒரு நகர சபையாக மாறிவிடும். கடந்த சில ஆண்டுகளாக இது நாட்டிற்கு எதிர்மறையான சூழ்நிலையாகக் காணப்படுகிறது.”

“நாம் ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கும் நேரத்தில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நமக்கென ஒரு பிரச்சனையை உருவாக்குகிறோமா அல்லது சமூகத்தின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கிறோமா என்ற நோக்கத்துடன்தான் இது முன்வைக்கப்பட்டுள்ளது.”

## ஊடகர் லசந்த படுகொலை......

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவித்திருந்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் பல சாட்சியங்கள் உள்ளதாகவும் தாமும் அதற்குரிய பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தெளிவாக உள்ளதாகவும் நீதியைப் பெற்றுக்கொடுக்க தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நீதியைப் பெற்றுகொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும் தெரிவித்தார்.

## அர்ச்சுனா எம்.பிக்கு......

நடந்துகொண்டமையினால் சபாநாயகர் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்தார். எதிர்க்கட்சித் தலைவரின் குறிப்பிட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதி சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்போது, புதன்கிழமை பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம். பியினால் சபாநாயகரை பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக்காட்டியும் கருத்தை வெளியிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். அதேபோன்று நேற்று (நேற்று முன்தினம்) எம்.பியொருவர் இந்த ஆசனத்தை பார்த்து ஷேம் என்று கூறி அவமதித்துள்ளார்.

நான் அவ்வேளையில் இந்த சபையில் இருந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார். இவ்வேளையில் அர்ச்சுனா எம்.பி. அது தொடர்பில் ஏதோ கருத்துத் தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்துகொண்டார்.

இதன்போது ஆசனத்தில் அமருமாறும் சபையின் ஒழுக்கத்தை பேணுமாறும் பிரதி சபாநாயகர் அவரை கேட்டுக்கொண்டார்.

ஆனால் தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி. அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து அர்ச்சுனா எம்.பி. அமைதியாக இருந்தார்.

## ஜனாஸா எரிப்பு.......

அதற்காக இதுதொடர்பில் விசாரணை நடத்த பாராளுமன்ற விசேட தெரிவுகுழு அமைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (7) கொவிட்19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதை தவிர்த்து தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொவிட் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டிருந்த வழிகாட்டலை அனைத்து நாடுகளும் பின்பற்றின. யாரும் அதனை மறுக்கவில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக அப்போது இருந்த ஆட்சியாளர்கள் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் மூலம் பாரிய குற்றத்தை செய்த ஆட்சியாளர்களாக அந்த ஆட்சியாளர்கள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர். அதனை யாராலும் மறைக்க முடியாது. ஏனெனில் இந்த தீர்மானத்தை அவர்கள் திட்டமிட்டு, பழிவாங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

அத்துடன் இந்த நடவடிக்கை குறிப்பிட்ட ஒரு மக்கள் இனத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப் பட்டது அல்ல. தகனம் மற்றும் அடக்கம் என்பது ஒரு மதத்துக்கு மாத்திரம் உரித்தான விடயமல்ல. ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளவர்களின் பட்டியலை எடுத்துப்பார்த்தால் தமிழ், முஸ்லிம், சிங்கள, கிறிஸ்தவ இனத்தவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதனால் இது எமது நாட்டு மக்களின் இன குழுமத்தின் மத கலாசார நம்பிக்கை உரிமையை மதிக்காமல் எடுத்த தீர்மானமாகும். அதனால் அந்த அரசாங்கம் எடுத்த இந்த தீர்மானம் தெரிந்துகொண்டு எடுத்ததா அல்லது தெரியாமல் எடுத்ததா என்பதை நாங்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதனால் இது தொடர்பில் தேடிப்பார்க்க நம்பகத்தன்மை மிக்க விசாரணை குழுவொன்று அவசியமாகும். அதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு வொன்றை அமைத்து விசாரணை மேற்கொள்வதே பொருத்தமாகும். பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு யாரை வேண்டுமானாலும் விசாரணைக்கு அழைக்க முடியும்.

அத்துடன் இந்த சம்பவத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மன்னிப்பு கோரினார். அவர் அரசியல்வாதிகளுக்காக இதனை செய்தார். அரசியல்வாதிகள் தவறு செய்ததாலே முன்னாள் ஜனாதிபதி மன்னிப்பு கோரினார். ஆனால் இதில் இருந்த அரச அதிகாரிகளும் இந்த விடயத்தில் இருந்து அப்போது இருந்த அரசாங்கத்துக்கு ஆலாசேனை வழங்கி வந்தார்கள்.

தற்போதுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரே அன்று கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நிபுணர்குழுவின் தீர்மானங்களை ஊடகங்களுக்கு தெரிவிக்கும் ஊடக பேச்சாளராக இருந்து வந்தார். அவர் இந்த விடயத்தை தெரிந்துகொண்டு செய்தாரா அல்லது தெரியாமல் செய்தாரா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதனால் இதுதொடர்பான உண்மை நிலையை அறிந்துகொள்ள விசாரணை மேற்கொள்ள பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றார்.

## அமெரிக்கா......

எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 58 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்துவதற்கு இந்த மாற்றமானது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தப்படுவதிலும், மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் கூடிய கலப்பு நீதிமன்றங்கள் போன்ற பொறிமுறைகளுக்காக வாதிடுவதிலும் அமெரிக்கா தொடர்ந்து முன்னணி பாத்திரத்தை வகித்து வருவதாக கலாநிதி மஹாநாமஹேவா சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், UNHRC இருந்து அமெரிக்கா வெளியேறுவது புவிசார் அரசியல் நிலப்பரப்பை இலங்கைக்கு சாதகமாக மாற்றும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வளர்ச்சியின் மூலம், எங்களின் சொந்த மனித உரிமைகள் திட்டத்தை முன்வைக்க எங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பானது, எங்கள் கதை மற்றும் எதிர்கால கொள்கைகளுக்கு பொறுப்பேற்க அனுமதிக்கும். இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளின் ஆதரவைப் பெற்றால், இலங்கைக்கு எதிரான முந்தைய தீர்மானத்தை நாம் திறம்பட எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## ஜனாதிபதியின் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

இலங்கை திருநாட்டில் காலத்திற்கு காலம் அரசாங்கங்கள் ஆட்சிக்கு வரும் போது நாட்டை சிங்கப்பூராக மாற்றுவோம் என அறை கூவல் விடுப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இருந்த போதிலும் காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்தால் அவ்வாறான செயற்பாடுகளை கைவிடுவது வழக்கமாகும். இருந்த போதிலும் மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதியின் எண்ணக்கருவில் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவது சிறந்த முன்மாதியாகும்.

நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அதிகார சபைகள் என அனைத்து தரப்பினரும் தற்போது க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை முன்மாதியான ஒரு திட்டமாக கருதி முனைப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த செயற்பாடானது அனைத்து வகையான அழுக்குகளையும் களைந்து சுத்தமான ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கு கைகோர்த்துள்ள செயற்பாடு என்றால் மிகையாகாது.

ஜனாதிபதியின் இந்த வேலைத்திட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் பூரண ஆதரவு வழங்கி வருவதை அவதானிக்கும் போது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த முன்மாதிரியான நாட்டை கையளிக்கும் வேலைத்திட்டமாகவே இதனை கருத வேண்டியுள்ளது.

editorml21@gmail.com

# ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலிலிருந்து வெளியேறிய அமெரிக்கா



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில் மற்றும் பலஸ்தீன அகதிகளுக்கு உதவி வழங்கும் நிறுவனத்திலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த சில வாரங்களாக பல சர்ச்சைக்குரிய முடிவுகளை எடுத்துவருகிறார்.

பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியதும், உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகியதும் அவற்றில் முக்கியமானவை.

இந்த சூழலில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

தனது முதல் பதவிக் காலத்தில், ஜூன் 2018 இல், ட்ரம்ப் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலில் இருந்து அமெரிக்காவை விலக்க நடவடிக்கை எடுத்தார். ஏனெனில் அந்த அமைப்பு பொருத்தமற்ற நாடுகளுக்கு தங்குமிடம் வழங்குவதாகவும், இஸ்ரேல் மீது தொடர்ந்து விரோதப் போக்கைக் காட்டுவதாகவும் குற்றம் சாட்டினார். இருப்பினும், 2021ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் தலைமையில் அமெரிக்கா மீண்டும் பார்வையாளராக இணைந்தது.

இதற்கிடையில், பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணி நிறுவனத்திற்கு (ருசேறுயு) நிதியுதவியை நிறுத்துவதற்கான நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் சமீபத்தில் கையெழுத்திட்டார்.

காசா பகுதி, மேற்குக் கரை, ஜோர்டான், லெபனான் மற்றும் சிரியாவில் வசிக்கும் பலஸ்தீன அகதிகளுக்கு நிவாரணம் வழங்கும் இந்த அமைப்பு 1950 இல் நிறுவப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் கட்டிடம் மீது ரஷ்யா கொடூரத் தாக்குதல்



உக்ரைனின் அடுக்குமாடிக் கட்டிடத்தின் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. உக்ரைனின் பெரிய நகரமான சுமியில் ரஷ்யா இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் குறித்த பகுதியிலுள்ள ஒரு அடுக்குமாடிக் கட்டிடமானது சேதம் அடைந்துள்ளது.

குறித்த தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 8 பேர் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளதுடன், 13பேர் வரை படுகாயம் காயமடைந்துள்ளனர். அத்தோடு உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மொத்தம் 81 தாக்குதல் ஆளில்லா விமானங்களை ஏவியதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

உக்ரைனின் வான் பாதுகாப்பு படை அவற்றில் 37 ஐ சுட்டு வீழ்த்தியதுடன், அவற்றில் 39 இலக்குகளை அடைவதற்கு முன்பே ரேடார்களில் இருந்து மறைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிக்டொக்கில் பதிவிட்ட மகளை சுட்டுக்கொன்ற தந்தை




டிக்டொக்கில் பதிவிட்ட விடயத்திற்காக தனது 15 வயது மகளை தந்தையொருவர் சுட்டுக்கொலை செய்த சம்பவம் பாக்கிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவிலிருந்து தனது குடும்பத்தினரை பாக்கிஸ்தானிற்கு மீள அழைத்து வந்த ஒருவரே இந்த கொலையை செய்துள்ளார்.

பாக்கிஸ்தானின் தென்மேற்கு நகரமான குவெட்டாவில் வீதியில் இந்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

முதலில் தனது மகளை இனந்தெரியாதவர்களே சுட்டுக்கொன்றனர் என தெரிவித்த யுவதியின் தந்தை அன்வர் உல் ஹக் பின்னர் தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்.

15 வயது யுவதி ஆடை அணிந்த விதம் அவரது வாழ்க்கை முறை குறித்து குடும்பத்தினர் எதிர்ப்பு வெளியிட்டு வந்தமை விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் அந்த யுவதியின் கையடக்கதொலைபேசி எங்களிடம் உள்ளது அது முடக்கப்பட்டுள்ளது, இது ஆணவ கொலையா என விசாரணை செய்கின்றோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் அமெரிக்க பிரஜாவுரிமை உடையவர், என தெரிவித்துள்ள பொலிஸார் தனது மகள் அமெரிக்காவில் வசிக்கும் போது சமூக ஊடகமான டிக்டொக்கில் ஆட்சேபணைக்குரிய விடயங்களை பதிவிட்டார் என அவரின் தந்தை தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

241 மில்லியன் சனத்தொகையை கொண்ட பாக்கிஸ்தானில் 54 மில்லியன் மக்கள் டிக்டொக்கினை பயன்படுத்துகின்றனர்- அதன் உள்ளடக்கங்களை ஒழுங்குபடுத்துவதற்காக முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பாக்கிஸ்தான் அரசாங்கம் பல தடவைகள் டிக்டொக்கிற்கு தடை விதித்துள்ளது.

EAST லீடர்

# நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் விழிப்புணர்வு



✦ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்ட செயலக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நுகர்வோர் அதிகார சபையின் பணிகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிந்தவூர் அல்-அஷ்ரக் (தேசிய பாடசாலை) உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்டதிட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு விளக்கக்காட்சியூடாக தெளிவுபடுத்தப்பட்டது.

# ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் முப்பெரும் விழா



✦ எம்.ரீ.எம்.பாரிஸ்.

நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த மட்டக்களப்பு ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யின் முப்பெரும் விழா பாடசாலையின் கேட்போர் கூடத்தில் கல்லூரி முதல்வர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாடசாலையின் பழைய மாணவரும் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளருமான ஏ.தாஹிர் கலந்து கொண்டார்.

அத்தோடு ஏனைய அதிதிகளாக, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக்கல்விக் பணிப்பாளர் ஏ.எல்.அபுல் ஹஸன், ஓட்டமாவடி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.எம். றியாஸ் உள்ளிட்ட கல்வியதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நவீன கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கேதுவாக ஸ்மார்ட் வகுப்பறை கட்டடத் தொகுதி, 2025ஆம் புதிய கல்வி ஆண்டின் தரம் ஆறு மாணவர்கள் வரவேற்றல் மற்றும் பாடசாலையின் பேண்ட் வாத்தியக் குழுவினருக்கான சீருடை அறிமுகம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

# பிரதேச சபை ஊழியர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனை

✦ நூருல் ஹுதா உமர்



காரைதீவு பிரதேச சபை ஊழியர்களுக்கான தொற்றா நோய்களுக்கான பரிசோதனை மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் காரைதீவு பிரதேச சபையில் நடைபெற்றது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிகள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# பொதுச்செயலாளர் பதவியிலிருந்து ஹசன் அலி இராஜினாமா

✦ ஹுதா உமர்



ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தான் விலகியுள்ளதாக எம்.ரி. ஹசன் அலி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்கவிற்கும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தலைவர் பஷீர் சேகு தாவூத்திற்கும் புதன்கிழமை கடிதம் அனுப்பியுள்ளார்.


அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்வதை முறையாக அறிவிக்கின்றேன் எனவும், இதனை உடனடியாக அமுல்படுத்துமாறும், இல.30, கடற்கரை வீதி, கல்கிஸ்ஸையிலுள்ள எனது இல்லத்தில் இயங்கி வரும் இக்கட்சி அலுவலகமும் இனிமேல் குறித்த விலாசத்தில் இயங்காது எனவும் அறிவித்துள்ளார்.

## கல்முனை மாநகர சபையின் கணக்காளராக பிரியதர்ஷன் கடமையேற்பு

✦ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபையின் புதிய கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள பி.பிரியதர்ஷன் தனது கடமைகளை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை மாநகர சபையின் கணக்காளராக கடமையாற்றி வந்த வை.ஹபீபுல்லாஹ் சமுர்த்தி திணைக்களத்தின் பிரதம கணக்காளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்தே, களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் கணக்காளராகக் கடமையாற்றி வரும் பி.பிரியதர்ஷன் அப்பதவிக்கு மேலதிகமாக மாநகர சபையின் கணக்காளராக பதில் கடமையாற்றும் பொருட்டு



கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு







**எம்.ஜி.ஏ. நாஸர்**

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக முன்னெடுக்கப்படும் கிளீன் ஸ்ரீலங்கா தேசிய திட்டம் தொடர்பாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள கல்வித்துறை அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு விழிப்புணர்வூட்டும் முழுநாள் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்எம்.ஜவாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் கோறளை மத்தி ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த 79 பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரீ.எம்.எஸ் அஹமட், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானோர் பங்கேற்றனர்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம். எச். எம். றமீஸ், ஏ. எம். முபாஸ்தின் ஆசிரிய வாண்மை விருத்தி வள நிலையத்தின் முகாமையாளர் ஏ. றியாஸ் ஆகியோர் இங்கு கருத்துரை வழங்கினர்

# டெங்கு பரிசோதனை முன்னெடுப்பு





**ஸைபுல் ஹபீஸ், நூருல் ஹுதா உமர்**

ஜனாதிபதியின் எண்ணக் கருவில் உருவான க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையிலான சுகாதார பரிசோதகர்கள் நேற்று சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் பரிசோதனைகள் மேற்கொண்டனர்.

இதன் போது டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான இடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிறுவன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது.

இதன் போது சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.ஜெரின் உள்ளிட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பாடசாலைகளில் டெங்கு மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பரிசோதனை நடவடிக்கையின் போது மாணவர்களின் மலசலகூடம் மிகவும் அசுத்தமானதாகவும் மோசமானதாகவும் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. மேலும் டெங்கு நுளம்புகள், நுளம்புக் குடம்பிகளும் அதிகமாக இனம் காணப்பட்ட இடங்களாகவும் பாடசாலைகள் காணப்படுகிறமையால் அப்பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் பாடசாலையின் சுகாதாரத்தை சீர் செய்வதற்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் அந்த குறுகிய காலத்திலும் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இவற்றினை குறிப்பிட்ட காலத்தில் சிறப்பாக பேணாத பாடசாலைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் சூழலை பராமரிக்க களத்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி இதன்போது தெரிவித்தார்.

## அதிக விலைகொடுத்து நெல்லை கொள்வனவு செய்யும் தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள்

நாட்டில் உள்ள பிரதான தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அரசு நிர்ணயித்த விலையை விட ஐந்து முதல் ஆறு ரூபாய் வரை கூடுதலாக விலை கொடுத்து கொள்வனவு செய்வதாக தெரியவருகிறது.

தனியார் வியாபாரிகளிடம் அதிக விலைக்கு நெல்லை விற்பனை செய்வதாக விவசாயிகளும் கூறுகின்றனர்.

மேலும், அரசுக் கட்டுப்பாட்டு விலையை விட, ஐந்து முதல், ஆறு ரூபாய் வரை கூடுதல் விலைக்கு, பெரிய அளவிலான ஆலை உரிமையாளர்களுக்கு, நெல்லை மொத்தமாக விற்பனை செய்வதாக, விவசாயிகள் கூறுகின்றனர்.

ஆனால், ஒரு விவசாயியிடம் இருந்து அதிகபட்சமாக ஐயாயிரம் கிலோ அரிசி மட்டுமே வாங்குவதாக அரசு கூறுகிறது.இம்முறை நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஐநூறு கோடி வழங்கப்பட்டுள்ளது.

## டிஜிட்டல் மயமாக்கல் நாட்டை ஒரு புதிய நிலைக்குக் கொண்டு செல்வோம் - ஜனாதிபதி

அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் மயமாக்கலில் டிஜிட்டல் அடையாள அட்டை முக்கிய திருப்புமுனையாகும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஒரு படியாக “GOVPAY" கட்டண வசதியை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில், டிஜிட்டல் மயமாக்கல் ஒவ்வொரு நபருக்கும் ஒரு கலாச்சார வாழ்க்கையை வாழ அனுமதிக்கும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நமது நாட்டில் ரூபாய் நோட்டுகளின் பயன்பாட்டைக் குறைக்க நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்கு டிஜிட்டல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது. மக்களுக்கு மிக எளிதான அணுகலை உருவாக்க வேண்டும். இந்த GovPay தளம் அதில் மிகவும் வலுவானது. மக்கள் தெருக்களில் அலைந்து திரியும் வாழ்க்கையை விரும்பவில்லை. ஒவ்வொரு நபருக்கும் ஒரு கலாச்சார வாழ்க்கை தேவை. இதற்காக, நமது பொறுப்புகளை நிறைவேற்ற ஒரு குறிப்பிட்ட நேரமும், தூங்க மற்றொரு குறிப்பிட்ட நேரமும் தேவை.

ஆனால் நமக்கு இருக்கும் பணிச்சுமை இந்த நிலைக்கு வந்தவுடன், கலாச்சார வாழ்க்கைக்கு நமக்கு இடமில்லை. அந்த நேரத்தில் முன்பதிவு செய்யும் போது டிஜிட்டல் மயமாக்கல் எங்களுக்கு வசதியைத் தருகிறது. இந்த டிஜிட்டல் மயமாக்கல் பயிற்சியை நாம் வெற்றிகரமாக்க வேண்டும்.

முக்கிய திருப்புமுனை டிஜிட்டல் அடையாள அட்டை. இது செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இந்த மாற்றங்கள் நமக்கு விரைவாகத் தேவை எனவும் தெரிவித்தார்.

# சுகாதாரம் பேணாத உணவகங்கள், பேக்கரிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை

## சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன்

**அலுவலக செய்தியாளர்**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் திடீர் பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் போது, சாய்ந்தமருது பிரதான வீதியிலுள்ள உணவு கையாளும் நிறுவனங்கள், வியாபார நிலையங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சுகாதார நிலைகளை ஒழுங்காக பேணாத வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும், அறிவுறுத்தலும் கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

மட்டுமின்றி, இதன் போது தங்களது சுற்றுச் சூழலை நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் வைத்திருந்தவர்களுக் கெதிராகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல். ஜெரின் உட்பட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

மேலும், முறையான அனுமதிப்பத்திரமில்லாத உணவகங்கள், வைத்திய சான்றிதழ் இல்லாது



உணவகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் முறையான கழிவுநீர் தொட்டியில்லாத, குளிர்சாதனப் பெட்டிகள் முறையாகப் பராமரிக்காத, தனி நபர் சுகாதாரம் பேணாத, சமைக்கும் இடங்கள் சுகாதாரமாக பேணாத உணவகங்கள், பேக்கரிகளுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும் பொறுப்புமாகும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் இதன் போது தெரிவித்தார்.

# மாமனார், மருமகன் மோதல் : மாமனாரின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு


**பாறுக் ஷிஹான்**

மருமகனுடன் ஏற்பட்ட குடும்பப்பிரச்சினை முரண்பாடு மோதலாக மாறி மாமனார் உயிரிழந்த சம்பவமொன்று அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தென்னம்பிள்ளைக் கிராமத்தில் புதன்கிழமை (29) இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்குறித்த தாக்குதலின் போது மத்திய வீதி மலையடிக்கிராமம் 01 ஐச்சேர்ந்த 55 வயது நபரே மரணமடைந்திருந்தார். இதே வேளை, மாமனாருடன் மோதலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட மூதூர், ஆலிம்சேனை 02 ஐச்சேர்ந்த 37 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் மரணமடைந்தவரின் மகளின் வாடகை வீட்டில் இடம்பெற்றுள்ளதுடன், பொலிஸாரின் 119 இலக்கத்திற்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய சடலம் பொலிஸாரினால் சம்பவ இடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

குறித்த மரணம் மோதலினால் தாக்கப்பட்டு மரணமடைந்தாரா? அல்லது மாரடைப்புக் காரணமாக நிகழ்ந்துள்ளதா? என்பது தொடர்பில் ஆராயும் நோக்கில் பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இன்று குறித்த சடலத்தின் மீதான மரண விசாரணையை சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் டி.கருணாகரன் மேற்கொண்டதுடன், சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஆர்.எம். வி.வி.கே.ராஜகுரு மரண



விசாரணை மற்றும் உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாகக் குறிப்பிட்டு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2017ம் ஆண்டு மரணமடைந்தவருக்கு மாரடைப்பிற்காக சிகிச்சை வழங்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# அரசாங்கத்தின் அறிவிப்பு சட்டத்திற்கு முரணானது - முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கொடி

**நூருல் ஹுதா உமர்**

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தேர்தலை ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படுமென்று அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்தது ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என நாங்கள் கருதுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஊடக அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தற்பொழுது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தல் விஷேட சட்ட மூலம் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதி அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழியங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும். ஆகவே, தேர்தல் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளர்களை அழைத்து கலந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கோ அல்லது கட்சிக்கோ சாதகமாக திகதியைத் தீர்மானிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.




# இலங்கையின் 77ஆவது தேசிய சுதந்திர தினம்





























SRI LANKA

# இலங்கையின் 77ஆவது தேசிய சுதந்திர தினம்

# பிரதேச மட்டங்களின் நிகழ்வுகள்



சாய்ந்தமருது பிரதேச செயலகம்



சாய்ந்தமருது பௌஸி மைதானம்



நிந்தவூர் பிரதேச சபை



கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்



நிந்தவூர் பிரதேச செயலகம்



பாலமுனை மஹ்ஹாஸினுல் உலூம்



அம்பாறை மாவட்ட செயலகம்



மட்டக்களப்பு மாவட்ட செயலகம்



இறக்காமம் பிரதேச செயலகம்



சம்மாந்துறை



அல். ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயம்



கல்முனை மாநகர சபை

SPORTS லீடர்
sportsml77@gmail.com



# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 257 ஓட்டங்கள்

இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச கிரிக்கட் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பாக குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்களையும் தினேஸ் சந்திமால் 74 ஓட்டங்களையும் திமுத் கருணாரத்ன 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் மிச்சல் ஸ்டார்க், நெதன் லியோன் மற்றும் மேத்யூ குஹ்னேமன் ஆகியோர் தலா 3 விக்கட்டுக்கள் வீதம் கைப்பற்றியுள்ளனர்

# முன்னாள் டென்னிஸ் வீராங்கனை ஓய்வு




முன்னணி டென்னிஸ் வீராங்கனைகளில் ஒருவராக சிமோனா ஹாலெப் காணப்படுகிறார்.

இந்நிலையில், ருமேனியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலெப் டென்னிஸில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். தனது உடல்நலப் பிரச்சனைகளே ஓய்வுபெறுவதற்கான முதன்மை காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

“நான் உலக நம்பர் 1 ஆனேன். கிராண்ட்ஸ்லாம் வென்றேன். டென்னிஸுக்குப் பிறகு வாழ்க்கை இருக்கிறது. நாம் மீண்டும் ஒருவரை ஒருவர் பார்ப்போம் என நம்புகிறேன்” என தெரிவித்தார். முழங்கால் மற்றும் தோள்பட்டை பிரச்சனை காரணமாக அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் இருந்து ஹாலெப் விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிமோனா ஹாலெப் கடந்த 2017ஆம் ஆண்டில் முதல் முறையாக நம்பர் ஒன் தரவரிசையை அடைந்தார். 2 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

# பிறந்தவுடனே குப்பைத் தொட்டியில் வீசப்பட்ட சிறுமி இன்று அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணியின் கேப்டன்



மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் ஸ்ரீவஸ்தவா அனாதை இல்லம் உள்ளது. ஆகஸ்ட் 13, 1979 அன்று, தெரியாத நகர மூலையில் ஒரு பெண் பிறந்தாள். அவள் பிறந்தவுடன், அவளுடைய பெற்றோர் அவளை அனாதை இல்லத்திற்கு வெளியே ஒரு குப்பைத் தொட்டியில் வீசினர். அனாதை இல்ல மேலாளர் அழகான சிறுமிக்கு லைலா என்று பெயரிட்டார்.

அந்நாட்களில் ஹரேன் மற்றும் சூ என்ற அமெரிக்க தம்பதிகள் இந்தியாவிற்கு வருகை தந்தனர். இவர்களது குடும்பத்தில் ஏற்கனவே ஒரு பெண் குழந்தை இருந்தும், ஒரு ஆண் குழந்தையை தத்தெடுக்க இந்தியா வந்துள்ளனர்.

அவர்கள் ஒரு பையனைக் கண்டுபிடிக்கவில்லை, ஆனால் சூவின் கண்கள் லைலா மீது விழுந்தன. சிறுமியின் பிரகாசமான பழுப்பு நிற கண்கள் மற்றும் அப்பாவி முகத்தைப் பார்த்த அவள் அவள் மீது காதல் கொண்டாள்.

சட்ட நடவடிக்கை எடுத்த பிறகு, சிறுமி தத்தெடுக்கப்பட்டார், சூ தனது பெயரை லைலாவிலிருந்து “லிஸ்” என்று மாற்றினார், அவர்கள் மீண்டும் அமெரிக்காவிற்குச் சென்றனர், ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் சிட்னியில் நிரந்தரமாக குடியேறினர்.

தந்தை தனது மகளுக்கு கிரிக்கெட் விளையாட கற்றுக் கொடுத்தார், இந்த பயணம் வீட்டில் உள்ள பூங்காவில் விளையாடி தெருவில் உள்ள சிறுவர்களுடன் விளையாடுவது வரை தொடங்கியது.

கிரிக்கெட் மீதான அவரது ஆர்வம் அபரிமிதமானது, ஆனால் அவர் தனது படிப்பையும் முடித்தார். நல்ல வாய்ப்பு கிடைத்து, படிப்பை முடித்து, முன்னேறினாள். முதலில், அவள் பேசினாள், பிறகு அவளுடைய மட்டை பேச ஆரம்பித்தது, பின்னர் அவளுடைய பதிவுகள் பேச ஆரம்பித்தன.


8 டெஸ்ட் போட்டிகள், 416 ரன்கள், 23 விக்கெட்டுகள்

125 ஒருநாள், 2728 ரன்கள், 146 விக்கெட்டுகள்

54 டி20, 769 ரன்கள், 60 விக்கெட்டுகள்

ஒருநாள் போட்டியில் 1000 ரன்கள் மற்றும் 100 விக்கெட்டுகள் எடுத்த முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை. ஐசிசியின் தரவரிசை முறை தொடங்கியபோது அவர் உலகின் நம்பர் ஒன் ஆல்ரவுண்டராக இருந்தார். அவுஸ்ரேலியா கேப்டன் ஆகினார்

# ஒருநாள் போட்டிகளிலிருந்து விடைபெறும் மார்கஸ்



அவுஸ்ரேலியா கிரிக்கட் வீரர் மார்கஸ் ஸ்டொயினிஸ் சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் அவர் தனது ஓய்வை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக அவுஸ்ரேலியா கிரிக்கட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டுவன்டி டுவன்டி கிரிக்கட் போட்டிகளில் அதிக கவனத்தை செலுத்தும் வகையில் இந்த தீர்மானத்தை அவர் எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் செம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஓய்வை அறிவித்துள்ளதால், தொடரில் விளையாடுவதற்கு அவருக்கு பதிலாக மாற்று வீரரை களமிறக்க வேண்டிய கட்டாயம் அவுஸ்ரேலியா கிரிக்கட் அணிக்கு ஏற்பட்டுள்ளது.